
Tamil / தமிழ்

# உங்கள் மாநில பாராளுமன்றம் பற்றி

## அரசாங்கத்தின் நிலைகள்

அவுஸ்திரேலியாவில் உள்ளூர், மாநில மற்றும் கூட்டாட்சி என மூன்று நிலையிலான அரசாங்கங்கள் உள்ளன.
**மத்திய அரசாங்கம்:** வரி, சர்வதேச உறவுகள் (வெளி விவகாரங்கள்), பாதுகாப்பு, குடிபெயர்வு மற்றும் இது போன்ற ஆஸ்திரேலிய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மத்திய அரசு பொறுப்பாகும். மத்திய அரசாங்க மட்டத்தில் உருவாக்கப்பட்ட சட்டங்கள் ஆஸ்திரேலியா முழுவதும் பொருந்தும்.
**மாநிலம்:** ஆஸ்திரேலிய அரசியலமைப்பில் குறிப்பிடப்படாத விடயங்களுக்கு மாநிலங்கள் பொறுப்பு - கூட்டாட்சியின் போது மாநிலங்களுக்கு விடப்பட்ட விடயங்கள். கல்வி, சுகாதாரம், அவசர சேவைகள், சுற்றுச்சூழல் மற்றும் இது போன்ற பெரிய பிரச்சினைகளையும் மாநிலங்கள் கையாளுகின்றன.
**உள்ளாட்சி: ஆ**ஸ்திரேலியா முழுவதும் நூற்றுக்கணக்கான உள்ளூர் நகரவைகள் உள்ளன. சமூக சேவைகள், விளையாட்டு மைதானங்கள், குப்பை சேகரிப்பு மற்றும் கட்டிட அனுமதி போன்ற வீட்டிற்கு நெருக்கமான விடயங்களை நகரவைகள் கவனிக்கிறது.
தெற்கு ஆஸ்திரேலியாவின் பாராளுமன்றம் மாநில அளவில் உள்ளது.




## அதிகாரங்களைப் பகிதல்

ஆஸ்திரேலியாவில், 1) சட்டங்களை உருவாக்குதல், 2) சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் 3) சட்டத்தைப் பற்றி முடிவெடுப்பதற்கான அதிகாரங்கள் அரசாங்கத்தின் வெவ்வேறு பிரிவுகளுக்கு இடையில் பகிரப்பட்டுள்ளன, இதனால் கட்டுப்பாடு ஒரு அமைப்பிடம் மட்டுமே தங்கியிருக்காது.
**பாராளுமன்றம் / சட்டமன்றம்**: நாடாளுமன்றம் அடிப்படை சட்டத்தை உருவாக்கும் அமைப்பாகும். நாடாளுமன்றத்தில் பணியாற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களுக்காக சட்டங்களை உருவாக்குகிறார்கள்.
**நிறைவேற்று அதிகாரி** : நிறைவேற்று அதிகாரி என்பது அமைச்சர்கள் (சில நேரங்களில் அமைச்சரவை என்று அழைக்கப்படுகிறது) மற்றும் பல்வேறு அரசாங்கத் துறைகளில் அமைச்சர்களின் கீழ் பணிபுரியும் அரசாங்கச் சேவை ஆகும். நிறைவேற்று அதிகாரம் சட்டத்தை அமுல்படுத்துகிறது, அல்லது, நடைமுறைக்கு கொண்டு வருகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு பொதுப் பள்ளியில் ஒரு ஆசிரியர் ஒரு பொதுக் கல்வி சேவை குறித்து உருவாக்கப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்துகிறார். நிறைவேற்றுப் பணிகளின் மற்றொரு எடுத்துக்காட்டு, பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட குற்றவியல் சட்டங்களை அமுல்படுத்தும் காவல்துறை ஆகும்.
**நீதித்துறை**: நீதித்துறை என்பது நீதிமன்றங்களின் அமைப்பு. எடுத்துக்காட்டாக, சட்டம் சரியாகப் பயன்படுத்தப்பட்டதா, அல்லது அது அதன் அதிகார வரம்பிற்குள் செய்யப்பட்டதா என்பதைத் தீர்மானிப்பதற்கான முதன்மை பொறுப்பு நீதிமன்றங்களுக்கு உள்ளது.
தெற்கு அவுஸ்திரேலியாவின் பாராளுமன்றம் என்பது அரசாங்கத்தின் பாராளுமன்ற / சட்டமன்றப் பிரிவாகும்.



## தெற்கு ஆஸ்திரேலிய பாராளுமன்றம்

1856 ஆம் ஆண்டு தெற்கு ஆஸ்திரேலியாவில் இரு அவைகள் (இரண்டு சபை) பாராளுமன்றத்தை அமைப்பதற்காக ஒரு அரசியலமைப்புச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த இரு அவைகளும் சட்டசபை மற்றும் சட்ட மேலவை என அழைக்கப்பட்டன. உலகின் முதல் ரகசிய வாக்கெடுப்புத் தேர்தலைத் தொடர்ந்து, முதல் மாநில பாராளுமன்றம் 1857 ஏப்ரல் 22 புதன்கிழமை அன்று கூடியது.

**சட்டசபை:** சட்டமன்றம் 47 நாடாளுமன்ற உறுப்பினர்களை (எம்.பி.க்கள்) கொண்டுள்ளது. இந்த 47 எம்.பி.க்கள் 4 ஆண்டுகளுக்கு சபையில் தெற்கு ஆஸ்திரேலிய மக்களை பிரதிநிதித்துவப்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஒரு எம்.பி சுமார் 25,000 வாக்காளர்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். சட்டமன்றத்தில் பெரும்பான்மை எம்.பி.க்களை உருவாக்கக்கூடிய அரசியல் கட்சி தெற்கு ஆஸ்திரேலியாவின் அரசாங்கமாக மாறும், மேலும் நிர்வாகத்தை நடத்தும் அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும் திறனை அவர்கள் பெறுகிறார்கள். சபாநாயகர் ஒழுங்கைக் கடைப்பிடிக்கிறார், சட்டமன்றத்தின் சின்னம் மேஸ் (Mace) ஆகும்.

**சட்ட மேலவை:** சட்ட மேலவை 22 உறுப்பினர்களால் (எம்எல்சி) உருவாக்கப்பட்டது. சட்ட மேலவை உறுப்பினர்கள் (MLC) தெற்கு ஆஸ்திரேலியாவின் மக்களால் 8 ஆண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், மேலும் சட்ட மேலவை உறுப்பினர்கள் (MLC) முழு மாநிலத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். அதாவது 22 எம்எல்சிகளும் உங்களுக்காக பணி செய்கிறார்கள். சட்ட மேலவைக்கு வாக்குகள் வித்தியாசமாக எண்ணப்படுகின்றன, மேலும் இந்த நாடாளுமன அவையில் பெரும்பாலும் சிறு கட்சிகள் அல்லது சுயேச்சைகள் அதிகம் உள்ளனர். சட்ட மேலவை தலைவர் ஒழுங்கை நிலைநாட்டுகிறார், சட்ட சபையின் சின்னம் பிளாக் ராட் (Black Rod).

## பாராளுமன்றத்தின் பணிகள்

பாராளுமன்றம் நான்கு முக்கிய பணிகளைக் கொண்டுள்ளது:

**பிரதிநிதித்துவம்:** தென் ஆஸ்திரேலியர்கள் தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தும் இடம் நாடாளுமன்றம் ஆகும். தென் அவுஸ்திரேலிய மக்கள் அரசாங்கத்தாலும் ஏனைய உறுப்பினர்களாலும் கேட்கப்படுவதை உறுதி செய்வதற்கான நாடாளுமன்ற குறை தீர்க்கும் விவாதங்கள், ஆர்வமுள்ள விடயங்கள் மற்றும் பிரேரணைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச முடியும்.

**கூர்ந்தாய்வு:** பல்வேறு அரசாங்கத் திணைக்களங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களும் பாராளுமன்றத்தில் பணியாற்றுகின்றனர். இதன் பொருள் உங்கள் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் அவற்றின் பணிகளை ஆராய்ந்து கேள்வி எழுப்பலாம்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களிடம் கேள்விகளைக் கேட்கலாம் - கேள்வி நேரம் (முன்னறிவிப்பு இல்லாத கேள்விகள்) அல்லது "முன்னறிவிப்பில்" கேள்விகளைக் கேட்கலாம்.

**நிதி:** பாராளுமன்றம் என்பது அரசாங்க செலவினங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படும் இடமாகும். ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். இது அடுத்துவரும் நிதியாண்டிற்கு ஆனி மாதத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

**சட்டமன்றம்:** தெற்கு ஆஸ்திரேலிய சட்டங்கள் உருவாக்கப்பட்டு மாற்றப்படும் இடம் பாராளுமன்றம்.

## கட்டிடம்

இந்த பாரம்பரிய கட்டிடத்தில் பளிங்கு தூண்கள், கொரிந்திய (Corinthian capital) கட்டிடக்கலை பாணியில், மற்றும் 19 ஆம் நூற்றாண்டின் ஆளுநர்கள், மேலவை தலைவர்கள் மற்றும் சபாநாயகர்களின் கற்சிற்பங்கள் உள்ளன. கபுண்டாவிலிருந்து (Kapunda) பளிங்குக்கல் மற்றும் விக்டர் ஹார்பரிலிருந்து (Victor Harbor) கருங்கல் ஆகியவை பயன்படுத்தப்பட்ட முக்கிய கட்டுமானப் பொருட்களாகும். சபைகளின் வண்ணங்கள் சட்ட மேலவைக்கு சிவப்பு மற்றும் சட்டசபைக்கு பச்சை என்ற பிரித்தானிய பாரம்பரியத்தைப் பின்பற்றுகின்றன. 1889 ஆம் ஆண்டு ஆனி 5 ஆம் நாள் சட்டமன்றம் திறக்கப்பட்டது. 1936 ஆம் ஆண்டில், சர் லேங்டன் போனைத்தன் (Sir Langdon Bonython ) 100,000 பவுண்டுகளை பரிசாக வழங்கினார், இது 1939 ஆனி 5 அன்று திறக்கப்பட்ட சட்ட சபையில் பணியைத் தொடங்குவதற்கு உதவியது. டாம் பிரைஸ் (Tom Price) (1905-1909) மற்றும் பிராங்க் வால்ஷ் (Frank Walsh ) (1965-1967) ஆகிய இரண்டு முதலமைச்சர் களும் இந்த தளத்தில் கல்மேசன்களாக வேலை செய்தனர்.

## ஈடுபடுதல்

**வருகை:** பாராளுமன்ற கட்டிடம் கிங் வில்லியம் தெரு (King William Street )மற்றும் நோர்த் டெர்ரஸ் (North Terrace) மூலையில் உள்ளது. இரு அவைகளின் அமர்வுகளும் பொதுமக்களுக்கு திறந்திருக்கும், மற்றும் பார்வையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். பாராளுமன்றம் அமரவில்லை என்றால் வழிகாட்டப்பட்ட சுற்றுப்பயணங்கள் வார நாட்களில் காலை 10:00 மணிக்கும் மற்றும் பிற்பகல் 2:00 மணிக்கும் கிடைக்கின்றன. அனைத்து வருகைகளும் இலவசம். பள்ளி மற்றும் குழு சுற்றுப்பயணங்கள் உங்கள் உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர் மூலமாக முன்பதிவு செய்யப்பட வேண்டும். பாராளுமன்றத்தை நேரில் பார்க்க முடியாவிட்டால் ஆன்லைனில் நேரடி ஒளிபரப்பை பார்க்கலாம்.

**ஹன்சாட்:** ஹன்சாட் என்பது பாராளுமன்றத்தின் விவாதங்களின் உத்தியோகபூர்வ அறிக்கையாகும். ஹன்சாட் பத்திரிகையில் உள்ள பாராளுமன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் நீங்கள் படிக்க முடியும். ஹன்சாட் பாராளுமன்ற இணையத்தளத்தில் உள்ளது.

**குழுக்கள்:** உறுப்பினர்களின் சிறிய குழுக்கள், அவைகளின் சார்பாக விரிவான பணிகளை மேற்கொள்வதற்காக குழுக்களாக அமைக்கப்படுகின்றன. பாராளுமன்றக் குழுக்கள் தமது விதிமுறைகளுக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பில் சாட்சியங்களை எடுத்துக்கொள்வதற்கும், பரிசீலனை செய்வதற்கும், அறிக்கையிடுவதற்கும் பரந்த அதிகாரங்களைக் கொண்டுள்ளன. சமர்ப்பிப்புகள் மற்றும் பொது விசாரணைகளில் ஆஜராவதன் மூலம் பொதுமக்கள் குழுக்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளலாம்.

**மனுக்கள்:** மனு என்பது நடவடிக்கை எடுக்கக் கோரும் கோரிக்கை. எந்தவொரு குடிமகனும், அல்லது தெற்கு ஆஸ்திரேலியாவின் குடிமக்கள் குழுவும், நாடாளுமன்றத்தில் நடவடிக்கை எடுக்க மனு செய்யலாம். உதாரணமாக, மனுவானது சட்டத்தை அறிமுகப்படுத்தவோ அல்லது தற்போதுள்ள சட்டத்தை ரத்து செய்யவோ, திருத்தவோ அல்லது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அல்லது குறிப்பிட்ட நபர்களுக்கு ஆதரவாக நடவடிக்கை எடுக்க மனு கோரலாம். பாராளுமன்றத்தில் மனுத்தாக்கல் செய்வது அனைத்து குடிமக்களுக்கும் நீண்டகாலமாக நிறுவப்பட்ட அடிப்படை உரிமையாகும். எந்தவொரு தனிநபரும் அல்லது குழுவும் பாராளுமன்றத்தில் குறைகளை முன்வைக்க இது அனுமதிக்கிறது. இது மக்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையே நேரடித் தொடர்பு கொள்ளும் ஒரு சில வழிகளில் இதுவும் ஒன்று.

**ஆர்ப்பாட்டங்கள்:** பாராளுமன்ற கட்டிடத்தின் படிகளில் பேரணிகள் அல்லது ஆர்ப்பாட்டங்கள் அனுமதிக்கப்படுகின்றன, ஆனால் அமைப்பாளர்கள் சபாநாயகர் மற்றும் மேலவை தலைவரின் ஒப்புதலைப் பெறுவது முக்கியம். இது பாராளுமன்றத்தில் கலந்து கொள்ளும் அல்லது நடைபாதை மற்றும் சாலையைப் பயன்படுத்தும் பொதுமக்கள் மற்றும் பேரணி அல்லது ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பவர்களின் நலன்களுக்காகும்.

**உறுப்பினர்களைத் தொடர்புகொள்வது:** பிரச்சனைகள் குறித்த உங்கள் கருத்துக்களைப் பற்றி உங்கள் பிரதிநிதிகளிடம் பேச, எங்கள் இணையதளத்தில் உறுப்பினரின் தொடர்புத் தகவலைப் பார்க்கலாம்.

## கூட்டாட்சி பாராளுமன்றத்துடன் ஒப்பீடு

| | கூட்டாட்சி பாராளுமன்றம் | |
|---|---|---|
| | பிரதிநிதிகள் சபை | சட்டமாமன்றம் |
| மற்ற பெயர்கள் | கீழ்சபை | மேல்சபை |
| உறுப்பினர்கள் | 151 | 76 |
| பிரதிநிதித்துவம் | ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் 110,000 வாக்காளர்கள் உள்ள தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் | ஒவ்வொரு சட்டமாமன்ற மேலவை உறுப்பினரும் அவரவர் மாநிலம் அல்லது பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். ஒவ்வொரு மாநிலத்திற்கும் 12 சட்டமாமன்ற மேலவை உறுப்பினர்கள் உள்ளனர், மேலும் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் 2 பேர் உள்ளனர். |
| காலஎல்லை | 3 ஆண்டுகள் | 6 ஆண்டுகள் |
| வாக்களிக்கும் முறை | முன்னுரிமை | விகிதாசார - மாற்றக்கூடிய ஒற்றை வாக்கு |
| அதிகார வரம்பு | இயற்றப்பட்ட சட்டங்கள் முழு ஆஸ்திரேலியாவிற்கும் பொருந்தும் | இயற்றப்பட்ட சட்டங்கள் முழு ஆஸ்திரேலியாவிற்கும் பொருந்தும் |

| | தெற்கு ஆஸ்திரேலியாவின் பாராளுமன்றம் | |
|---|---|---|
| | சட்டமன்றம் | சட்ட மேலவை |
| மற்ற பெயர்கள் | கீழ்சபை | மேல்சபை |
| உறுப்பினர்கள் | 47 | 22 |
| பிரதிநிதித்துவம் | ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் (MP) 25,000 வாக்காளர்கள் உள்ள தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் | ஒவ்வொரு MLCயும் தெற்கு ஆஸ்திரேலியா முழுவதையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் |
| காலஎல்லை | 4 ஆண்டுகள் | 8 ஆண்டுகள் |
| வாக்களிக்கும் முறை | முன்னுரிமை | விகிதாசார - விருப்ப முன்னுரிமை |
| அதிகார வரம்பு | இயற்றப்பட்ட சட்டங்கள் தெற்கு ஆஸ்திரேலியாவிற்கு மட்டுமே | இயற்றப்பட்ட சட்டங்கள் தெற்கு ஆஸ்திரேலியாவிற்கு மட்டுமே |

## தொடர்பு கொள்க


தொலைபேசி: +61 8 8237 9100 | 1800 182 097 (கட்டணம் இல்லை)

எழுது: GPO Box 572, அடிலெய்ட் SA 5001, ஆஸ்திரேலியா

வருகை: பாராளுமன்ற கட்டிடம், நோர்த் டெர்ரஸ்(North Terrace), அடிலெய்ட் (Adelaide) எஸ்ஏ (SA )5000, ஆஸ்திரேலியா (Australia)

மின்னஞ்சல்: LegCo@parliament.sa.gov.au (சட்ட மேலவை)
Assembly@parliament.sa.gov.au (சட்டமன்றம்)

வலை: www.parliament.sa.gov

சமூக ஊடகம்:
பேஸ்புக்: @parliamentsouthaustralia
இன்ஸ்டாகிராம்: @parliamentsouthaustralia
யூடியூப்: தெற்கு ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் (South Australian Parliament)
ட்விட்டர்: @LegCouncilSA | @AssemblySA